கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2018 யூலை 25

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 03/2018**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைத் திருத்தம்**

1. **2018 ஓகத்து 01ஆம்** திகதியிலிருந்து பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொது இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தீர்ப்பனவிற்காக நான்கு (4) தீர்ப்பனவுச் சுற்றுக்கள் நடைமுறைக்கிடப்படவுள்ளன. தீர்ப்பனவுச் சுற்றுக்கள் மற்றும் ஒவ்வொரு தீர்ப்பனவு சுற்றுக்குமான லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் தீர்ப்பனவுச் சுற்றுக்கள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தீர்ப்பனவு நேரங்களும் பின்வருமாறு இருக்கும்.

| **லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் தீர்ப்பனவுச் சுற்று** | **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி** | **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி** |
|---|---|---|
| சுற்று 1 (14.00 மணி - 0700 மணி அடுத்தநாள் | 0845 மணி | 0900 மணி |
| சுற்று 2 (0700 மணி - 10.00 மணி) | 1100 மணி | 1115 மணி |
| சுற்று 3 (1000 மணி - 1200 மணி) | 1300 மணி | 1315 மணி |
| சுற்று 4 (1200 மணி - 1400 மணி) | 1500 மணி | 1515 மணி |

2. அதற்கமைய, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்காசெட்டில் முறைமை விதிகள் பதிப்பு 2.1 2013 ஓகத்து 4 இன் தொகுதி 4இன் வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2018 ஓகத்து 01ஆம் நாளியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்** பின்வருமாறு திருத்தப்படும்.

| நேரம் | நிகழ்வு | **நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள்** |
|---|---|---|
| 0630 மணி | முறைமை ஆரம்பித்தல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல் |
| 0730 மணி தொடக்கம் 0800 மணி வரை | நாளாந்தச் செயன்முறைகள் ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல் |
| 0800 மணி | வியாபாரத்திற்காக | கொடுக்கல்வாங்களை செயற்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| | லங்காசெட்டில் முறைமை திறக்கப்படுகிறது | முறைமை திறக்கப்படுகிறது. |
| 0800 மணி | நாளுக்குள்ளான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்புவசதி | நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவுகளின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |
| 0815 மணி | முதிர்ச்சிகள்/ வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன. | பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள்/ நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள்/தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் முதிர்ச்சிகள் |
| 0830 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் பிரதான தீர்ப்பனவு. |
| 0830 மணி | இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் உடனடி விற்பனை/ கொள்வனவு/ நீண்டகால மீள்கொள்வனவு ஏலம் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள், கொள்வனவுகள், நீண்டகால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலம் மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலத்தின் முதலாம் பிரிவு |
| 0845 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 |
| 1100 மணி | நேர்மாற்று மீள்கொள்வனவுகளை மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி திருப்புதல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1100 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 2 |
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி |

| | | |
|---|---|---|
| | பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சுற்று 2 |
| 1145 மணி | நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1300 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 2 |
| 1300 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1300 மணி | முதனிலை ஏலத்தீர்ப்பனவு/ குறுகிய கால இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஏலங்கள் மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலத் தீர்ப்பனவு |
| 1315 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 |
| 1315 மணி | குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுகளினுடைய முதலாம் பிரிவு தீரப்பனவு |
| 1445 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும சீராக்கல் தீர்ப்பனவு |
| 1500 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 3 |
| 1500 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1500 மணி | மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான முதன்மை வெட்டுநேரம் | வங்கிக்கு வங்கி MT2XX (தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (ரி+0இற்காக) மூடிவிடுதல். |
| 1515 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 4 |

| | | |
|---|---|---|
| | தீர்ப்பனவுத் தொகுதி | |
| 1545 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம் | பங்கேற்பாளர்கள் 1545 மணியிற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது. |
| 1600 மணி | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | துணைநில் கடன் வழங்கல் வசதி | துணை நில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு |
| 1630 மணி | இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காரணமாக காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும். |
| 1630 மணியிலியிருந்து 1700 மணி வரை | நாள்முடிவை செயன்முறைப்படுத்தல் | நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை |
| 1700 மணி | முறைமையினை மூடிவிடுதல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல். |

3. பங்கேற்பாளர்கள் இணைய உலாவி பணி நிலையங்களூடாக தமது தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறும் அதேநேரமொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகளின் தீர்ப்பனவு நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியங்களைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**டி.குமாரதுங்க**

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**